# ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மாவடிவேம்பு – 02 மக்களின் வாழ்வாதார அபிவிருத்தி தொடர்பான ஆய்வு

சாமித்தம்பி சந்திரகுமார்[1*]

**ABSTRACT.** மட்டக்களப்பு மாவட்டமானது கடந்த மூன்று தசாப்த காலமாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இருந்தது. இருப்பினும் கடந்த மூன்று வருடங்களாக யுத்தம் முடிவுக்குக்குக் கொண்டு வந்த நிலையில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களது வாழ்வாதார மற்றும் சமூகக் பொருளாதார காரணிகளை மீள்கட்டமைக்க வேண்டிய நிலையில் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் உள்ளன. அந்தவகையில் மாவடிவேம்பு – 02 கிராம மக்களும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு தங்களது வாழ்வாதார மூலங்களை இழந்த நிலையில் இவ்ஆய்வானது அவர்களது வாழ்வாதாரத்தை எவ்வாறு அபிவிருத்தி செய்யலாம் என்பதை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. இக்கிராமத்தில் தற்போது காணப்படுகின்றதும் எதிர்காலத்தில் கிடைக்கக் கூடியதுமான வளங்களை அடையாளம் காணலும், வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்துதலும், புதிய வாழ்வாதாரத் தொழில்களை அறிமுகப்படுத்துலும் ஆய்வின் சிறப்பு நோக்கங்களாக அமைகின்றது.

இக்கிராமத்தில் மக்களால் மேற்கொள்ளப்படுகின்ற வாழ்வாதாரத் தொழில்களான வீட்டுத்தோட்டம், சுயதொழில், கால்நடை வளர்ப்பு, மட்பாண்டக் கைத்தொழில்கள், மற்றும் நெற்பயிற்ச் செய்கை என்பவற்றின் அடிப்படையில், ஆய்வுப் பிரதேச மக்களிடம் இருந்து வினாக்கொத்து, கலந்துரையாடல், பேட்டிமுறை மூலம் தரவுகளும், தகவல்களும் பெறப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டது.

ஆய்வின் முடிவுகளின்படி மக்களின் தொழில்களை தொடர்ந்து செய்வதில் காணப்படுகின்ற பொருளாதாரப் பிரச்சினைகளும், அத்தோடு தொழில்களுக்கு நவீன முறைகளும் கையாள்வதில் விழிப்புணர்வு குறைவாகவும், உட்கட்டமைப்பு வசதி குறைபாடு உடையதாகவும் காணப்படுகின்றது. எனவே இவ்வாறான நிலையில் இக்கிராமத்தின் மக்களுக்கு புதிய வாழ்வாதாரத் தொழில்களை செயற்படுத்தி பயிற்சிகள், ஆலோசனைகள், விழிப்பணர்வுகள், வழிகாட்டல்களை மேற்கொள்ளுதலும் மற்றும் பொருளாதார வளங்களையும் இயன்றளவு பயன்படுத்தி வாழ்வாதாரதத் தொழில்களினால் வீட்டு வருமாத்தைப் அதிகரிப்பதன் மூலம் வறுமையும் குறைவடைந்து இப்பிரதேசத்தில் சமூகப் பொருளாதாரச் செயற்பாடுகளில் முன்னேற்றத்தையும் ஏற்படுத்தலாம்.

**Key words:** வீட்டுத்தோட்டம், சுயதொழில், கால்நடைவளப்பு, மட்பாண்டக் கைத் தொழில், நெற்பயிற்ச் செய்கை, புதிய வாழ்வாதாரத் தொழில்கள்.

* To whom correspondence should be addressed : ssanthiran28@gmail.com

[1] University of Jaffna